[1973 மார்ச் 27

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பக்கிங்ஹாம் கால்வாய் சீரமைப்புத் திட்டத்திற்காக இந்த ஆண்டு 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். 4 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டம் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. பக்கிங்ஹாம் கால்வாய் சீரமைப்புத் திட்டம் முடிந்ததற்குப் பிறகு அதிலே விசைப் படகுகள், துடுப்புப் படகுகள், உல்லாசப் படகுகள் விடுவதுபற்றி முடிவு செய்யலாம்.

திரு. சி. ஆறுமுகம் : பக்கிங்ஹாம் கால்வாய் வழியாக பழைய காலத்தில் பொருட்கள் வந்திருக்கின்றன. அதன் காரணமாக பொருட்களின் விலை குறைந்திருக்கின்றது. ஆனல் இப்பொழுது லாரிகளில் வருவதால் பொருட்களின் விலை ஏறியிருக்கிறது. இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு அரசு வேகமாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்திலே இந்தத் திட்டத்தைப்பற்றி அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போல் திட்டங்கள் விரைவாகச் செயல் படுத்தப்படும்.

எல்லாபுரம், கும்முடிப்பூண்டி நிலவள வங்கிகள்

* 531 வினா.—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லாபுரம், கும்முடிப்பூண்டி நிலவள வங்கிகள் மூலம் 1971-72-ல் வழங்கப்பட்ட கடன்கள் பற்றிய விவரங்கள் யாவை?

(இ) 1972-73-ல் கடன் வசதிகளை மேலும் விரிவுபடுத்த மேற்கொண்டுள்ள தீவிரப் பணிகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) & (இ) இதைப் பற்றிய விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

@ 124-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 மார்ச் 27]

திரு. கா. வேழவேந்தன்: *இப்படிக் கடன் வழங்குகின்ற ஏற்பாட்டில் இருக்கிற சிறு சிக்கலைப்பற்றி அந்த நிலவள வங்கிகள் அமைச்சரிடத்திலேயும், இந்த கூட்டுறவுத் துறைக்கும் அனுப்பி யிருக்கிற கோரிக்கை மனுக்களைக் கவனித்து விதிமுறைகளைத் தளர்த்த அரசு முன்வருமா?*

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: *கடன் வழங்குவதிலே சிக்கல் ஏதும் இல்லை. உலக வங்கியின் நடைமுறை விதிகள் 1—11—1971-லிருந்து அமலுக்கு வந்தன. புதிய விதிகள் என்ன என்ன என்று தெரிந்துகொண்டு, கடன் மனுக்கள் அனுப்பப்பட வேண்டும். தெரிந்துகொள்வதிலே காலதாமதம் ஏற்பட்டதே தவிர, அதிலே சிக்கல் ஒன்றும் இல்லை.*

புதிய கிணறுகள் தோண்டக் கடன்கள்

** 532 வினா.—**திரு. எஸ். கணேசன்:*** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—*

நடப்பாண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய கிணறுகள் தோண்டுவதற்கும், பம்பு செட்டுகள் அமைப்பதற்கும் சிறு பாசனத் திட்டத்தின்கீழ் கடனுகை வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: *தலைவர் அவர்களே, குழாய்க் கிணறுகளுக்காக 8.07 லட்சம் ரூபாய். பம்பு செட்டு களுக்காக 6.12 லட்சம் ரூபாய்.*

Wild Life Sanctuary in Coimbatore district

* 533 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether any Wild Life Sanctuary is to be set up in Coimbatore district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: *(அ) & (இ) 21—1—1973 அன்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டுள்ள ஆனைமலை வனவிலங்கு உய்விடத்தைத் தவிர, கோவை மாவட்டத்தில், வேறு வனவிலங்கு உய்விடம் ஏற்படுத்தும் உத்தேசம் எதுவும் தற்போது அரசுக்கு இல்லை.*